**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(20-01-2015 – 24-01-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 19-01-2016

**கடந்த கால வானிலை 14-01-2016 முதல் 18-01-2016 வரை**

| **காரணிகள்** | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 19-21 |
| மேக மூட்டம் | 2-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 46-75 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 7-12 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 24-01-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | **20.01.16** | **21.01.16** | **22.01.16** | **23.01.16** | **24.01.16** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 21 | 21 | 21 | 21 | 21 |
| மேக மூட்டம் | 3 | 3 | 3 | 3 | 3 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 74 | 72 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 52 | 50 | 48 | 48 | 48 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி:**

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடனும், குளிர்ந்தும் மற்றும் இலேசான காற்றுடனும் காணப்படும்: மழை இல்லை.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் பருப்பு வகைகள்**

**பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி- பூக்கும் பருவம் மற்றும் காய்க்கும் பருவம்**

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.
- கரும்பில் தண்டுத்துளைப்பான் பூச்சியினைக் கண்காணிக்க வேண்டும். பூச்சியின் தாக்கம் அதிகமாக காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த கார்போபியூரான் 3% G @ 10 கிலோகிராம்/ ஏக்கர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்பட்டால். இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி./ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.